## 8. அன்புடைமை

**71.** *அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்*
*புண்கணீர் பூசல் தரும்*

**அன்பினை மறைக்க தாழ் போட்டு**
**அடைத்து வைக்க முடியுமோ ?**
**அன்பிற்குரியவர்கள் துன்பம் காணுமிடத்து**
**அனிச்சையாக வெளிப்படும் கண்ணீர்த்துளி காட்டிவிடுமே !**

**72.** *அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு*

**அன்பு இல்லாதவர் தமக்கே உரியது**
**அனைத்தும் என்பர் !**
**அன்புடையார் தமக்கென்று எதையும் கருதாது**
**அனைத்தும் பிறருக்கு என்பர் !**

**73.** *அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
*என்போ டியைந்த தொடர்பு*

**அன்போடு பொருந்திய வாழ்க்கை என்பது**
**அருமை உயிர்க்கு உடம்போடும் எலும்போடும்**
**அடர்த்தியாக உள்ள தொடர்பை போலாகும்**
**அற்புத பயனாம் !**

**74.** *அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்*
*நண்பென்னும் நாடாச் சிறப்பு*

**அன்பு என்றென்றும் விருப்பத்தை**
**அடுத்தவர்களிடம் கொண்டு சேர்த்திடும் !**
**அத்தகைய உயர்ந்த உள்ளமே**
**அற்புதமான "நட்பு" எனும் பெருஞ்சிறப்பை உருவாக்கும் !**

**75.** *அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு*

**உலகில் இன்பமுற்று வாழுகின்ற**
**உயர்ந்த வாழ்க்கைக்கு காரணம் அவர்**
**உள்ளத்தில் 'அன்பு' எனும் அடிப்படைக் கோட்பாடு**
**உண்மையாகப் பெருக்கெடுத்து ஓடுவது தான் !**

76. *அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை*

**"அறம்" செய்வதற்கு மட்டுமே**
**"அன்பு" துணையாகத் திகழ்கிறது என**
**அறியாதவர் கூறுவர் ! உண்மையில்**
**அற்புத வீரச் செயலுக்கும் "அன்பே" துணை !**

77. *என்பி லதனை வெயில்போலக் காயுமே*
*அன்பி லதனை அறம்*

**உடம்பில் எலும்பில்லாப் புழுவை**
**உக்கிரமான வெயில் சுட்டெரிக்கும் !**
**அதே போல் அன்பில்லா உயிரை**
**"அறம்" வருத்தும் !**

78. *அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரந்தளிர்த் தற்று*

**உள்ளத்தில் அன்பு இல்லாத**
**உயிர் வாழ்க்கை என்றென்றும்**
**பாலைவனம் எனும் கொடிய நிலப்பரப்பில்**
**பட்ட மரம் துளிர்க்காததைப் போல் !**

79. *புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை*
*அகத்துறுப் பன்பி லவர்க்கு*

**'அன்பு' எனும் உறுப்பு**
**'அகத்தில்' இல்லை யெனில்**
**'அழகான' புற உறுப்புகள்**
**அமைந்து என்ன பயன் ?**

80. *அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு*

**அன்பு நெஞ்சம் மட்டும்**
**அமைந்துவிட்டால் உயிர் பெற்ற உடலாகும் !**
**அன்பு மட்டும் இல்லையெனில்**
**அது எலும்பைத் தோல் போத்திய வெற்றுடலாகும் !**